முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1420

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.08.2023, சனிக்கிழமை

1. தர்ம சக்தியே அரங்கா வாழ்க
   தவபலம் கொண்ட தேசிகா வாழ்க
   கர்மவினை போக்கி உலகமக்களை
   கலியுகத்தில் காக்க வந்த குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் ஆவணி மாதம் 02 ம் நாள், 19.08.2023 சனிக்கிழமை)
   ஊழ்போக்கிக் காக்கும் மகா சக்தியாக
   உலக உயிர் காக்கும் மாதவசக்தியாக
3. ஆகவே கலியில் அவதாரம் எடுத்த
   அரங்கனே ஆறுமுகன் என் அவதாரனே
   வரங்கள் தந்து யான் உன்னை
   வையகத்தில் காத்து வருதலுற
4. அரங்கனே உன்வழி வந்த மக்களெல்லாம் அகிலத்தில் ஞானபலம் கொண்டு
   வரம்பெற்று அரங்கன் உன்வழி வாழுகின்ற ஞானிகளாக ஆற்றல்கூடி
   கூடியே உலகமெங்கும் சன்மார்க்க நெறியை
   உயிர் கொலை நீக்கி ஜீவதயவோடு நடக்கின்ற மார்க்கத்தை
5. மார்க்கத்தை உலகோர் பின்பற்றும் வண்ணம்
   மகாசக்தியாக உலகமெல்லாம் பரப்பி
   ஆக்கமுடன் பேரற்புதம் புரிவர்
   அரங்கன் உன் அவதார நோக்கமாக
6. ஆகவே அகிலத்தில் ஞான ஆட்சி உதயமாக
   ஆற்றல்பட இயங்கி அரங்கன் அமைத்த
   மாற்றம் தரும் சத்திய ஜோதி அமைப்பு வழி
   மண்ணுலகுக்கு ஞான ஆட்சி தருவர்

7. தருகவே அற்புதம் சடுதி காணும்
தரணியே அரங்கன் வசமாகி
பெருமைமிக்க ஞானலோகமாக
பேருலகம் அரங்கன் தொண்டர்படை நிரம்பிய வண்ணம்

8. வண்ணமுடன் அற்புதம் காணும்
வடிவேலன் யான் வெளிப்பட எண்ணமெல்லாம்
மக்கள் என் வழிபாடு செய்ய
இனிதே உலகமாற்றம் சடுதி காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–